ஞாயிறு வெளியீடு விலை 0—1—3 REGD No. M. 4642

திராவிடநாடு


மலர் 5 29—12—46 இதழ் 34

# பீல்டுமார்ஷல் ஆனாலும்.........................!

மூன்றும் ஜார்ஜ்மன்னர் காலத்திலே, முதலமைச்சராக இருந்த ப்யூட், தமது அதிகாரத்தின் பிடி தளர்வது கண்டு பதவியை ராஜிநாமாச் செய்தார், அதுசமயம் அது ராஜிநாமாவுக்குக்காரணம் காட்டி ஒரு நண்பருக்கு எழுதிய கடிதம், நகைச்சுவையுடையதாக இருந்தது. "நானே அமைச்சர் மந்திரிசபையிலே, எனக்குத் துணையாக ஒரு மந்திரியும் இல்லை. நான் தனியனாக இருக்கிறேன். பிரபுக்கள் சபையிலே இருவர் தவிர வேறு யாரும் எனக்கு ஓட்டளிப்பதில்லை. ... ... ... பேடிக்காக்க... பிரதம ஜட்ஜ், எனக்கு ... அளித்தார், என்னைத்தாக்கிப் பேசிவிட்ட பிறகு—! இந்நிலையில் இருக்கிறேன் நான்."

சர். சி. பி. இராமசாமிஐயரின், ராஜிநாமாவுக்கான விளக்க அறிக்கையிலே, ப்யூட் மனப்பான்மை

இல்லை, ஆனால், மயிலை நண்பர்களிடம் மனம் திறந்து பேசும்போது, இவ்வண்ணம் கூறாமலிருக்கமுடியாது. ராஜகுடும்பம் அவரை ஆதரிக்கிறதா இல்லையா, காரணம் என்ன; அவருக்கு அவ்விடம் உள்ள செல்வாக்குக்கு;



இவைபற்றி நமக்கு அக்கரை இல்லை!

ப்யூட் என்ற பிரிட்டிஷ் மந்திரிக்கு, மூளைபலம் கிடையாது. பிட் என்ற மந்திரிபோலவோ கிளாஸ்டன் போன்றோ, பெரிய திறமைசாலியுமல்ல. ஆனால் அந்த அமைச்சர்களெல்லாம், அடைய

முடியாத அளவு, அரண்மனையில் செல்வாக்கு ப்யூட் என்ற மட்டரகமந்திரியால் பெறமுடிந்தது. மூன்றும் ஜார்ஜ் மன்னன் ப்யூட் போட்டுக்காட்டிய கோட்டைத் தாண்டவில்லை.

"மன்னனாக இரு! மன்னன் நீ, அதனை மறவாதே! மன்னா! உன் பதவியின் மகிமையை மறவாதே; மன்னனாக இரு!!"

என்று, அடிக்கடி ப்யூட் உபதேசித்து வந்தானாம்.

சர். சி. பி. யும், அதே தொனியில் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அ. நி. சபையிலே, இந்தியாவின் எதிர்கால அரசியல், குடியரசாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் வந்தது, முடியில்லா, ஆனால் முடியுள்ளோரின் அடிதாங்குவதற்கு முதல் சாம்பூலம் பெற்றுள்ள சர். சி. பி. முழக்கமிடுகிறார், "ஆஹா! இந்த அநீதி ஆகுமா? அது எப்படி, ராஜாக்களின் அதிகாரத்தைப் பறிக்கலாம்! முடியுமா? முடியுடை மன்னருக்கே சகல உரிமையும். அவர்களாகப் பார்த்து, மனம் வைத்து, மக்களுக்கு, உரிமைகள்

# பரமன் பாரீர்!

★

பாரதனைப் புரக்கின்ற பரமனவன் பாவம்,
பாவையுடன் சீருக்குள் படுகின்றான் இன்னல்!
சீரடியைப் போற்றிடின் சீர் பெறுவோம் என்று
சேவித்த மக்காள் நீர் சிகைக்கோதி யிடையில்
ஈரடிதான் படுவதுபோல் இடிகின்றீர், நீங்கள்,
இல்லம்தான் பொருளுடனே மற்றும்பல வோடு
நீரடியில் அமிழ்ந்ததுவே! நிர்க்கதியாய் உள்ளீர்
நிமலனுமோ காப்பாற்ற வருவானோ கூறும்?

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையுள்ள மலைமேல்
வேங்கடவன் அவனைத்தான் வேதியரோ டமைத்து
எண்ணுவதற் கியலாத படிகளும் செதுக்கி
ஏறுவதும் இல்லாது கால்வலிதான் கண்டீர்
தண்ணீரும் வருவதுமே தெரியாது தாங்கி
தத்தளிக்கும் ஆண்டவனை வேதியர் சிறிதும்
எண்ணாமல் கைவிட்டே ஓடிவிட்டார்! தன்னைக்
காக்கவோ தெரியவில்லை! காப்பவனும் உலகை.

பாட்டாளி கண்ணீரால் நனைவுற்று ஒளிரும்
பலகற்கள் பொருத்தி ஒரு முடியும்தான் வைத்தீர்.
வீட்டினிலே இருள்சூழ வெங்கடத்தான் வீட்டில்
வைரத்தால் ஒளியமைத்தீர்! வாகனமும் தந்தீர்!
பாட்டியற்றி பொருள்கொடுத்து மேன்மையென்ன பெற்றீர்?
பூட்டைத்தான் திறந்துதர இயலாதான் எங்கே
கோட்டையினைத் திறப்பானோ? விழிபெற்றும் இருளைக்
கொண்டிட்ட குருடர்போல் வாழாதீர், வெட்கம்!

மு. அ. ஆடலழகன்

---

வழங்குகிறார்கள். அவ்வளவே தவிர, மக்களுக்கே நாட்டின் உரிமை என்று கூறுவது அடுக்குமா! மன்னருக்கே மண்டலம், மக்களுக்கு அல்ல!" என்று விரசம் சொட்டச் சொட்டப் பேசியிருக்கிறார்.

ரசம் இருக்கிறது, ஆனால், இனிப்பிலே புளிப்பேறிவிட்ட காடியின் வகை. மலாய் பகுதியிலே, சாரவாக் என்றோர் ராஜ்யம். ப்ரூக் என்ற வெள்ளைக்காரன் அதற்கு ராஜாவானான். போருக்குப் பிறகு ஆங்காங்கு ஏற்பட்ட புது அமைப்புகளைக் கண்டு, ப்ரூக், தான் இனி 'ராஜா'வாக இருக்கப் போவதில்லை என்றும், சாரவாக், பிரிட்டிஷ் ஆட்சிக்கே சேர்த்துவிடப்பட வேண்டுமென்றும் விரும்பினான். முடி பறிக்கப்பட்டும், நாட்டைவிட்டே விரட்டப்பட்டும் மன்னர்கள் பரதவிக்கும் இந்த நாட்களிலே, ப்ரூக், தானாகவே ராஜ்யத்தை விட்டுவிட முன்வந்ததைத் தியாகம் என்று கூறவும் மாட்டார்கள், யூகம் என்று வேண்டுமானால் கூறலாம். மன்னர்களின் முடி இன்று மக்களின் சம்மதத்தைப் பெற்றால் மட்டுமே இருக்கமுடியும் என்பதனை விளக்கும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. கிரேக்க நாட்டுக் காவலன்' சீமையில் வசித்து வந்தான், நாடு இழந்து. பின்னர் அங்கு கட்சிகளுக் கிடையே பூசல் ஏற்பட்டதுடன், அரசன் வேண்டுமா வேண்டாமா என்பது விசாரிக்கப்பட்டு, ஓட் எடுக்கப்பட்டு, பெருவாரியான மக்கள், மன்னன் இருக்கவேண்டும் என்று ஓட் அளித்ததால், மீண்டும் அரசனாக முடிந்தது. அந்த நிலைக்கு வந்துவிட்டது அரசரின் வாழ்வு. காரணம் இல்லாமல் இந்தக் கருத்து மாற்றம் ஏற்பட முடியுமா? மன்னன் தேவனின் பிரதிநிதி, ஆண்டவனுடைய அருள் பெற்று ஆளும் உரிமையைப் பெற்றவன் என்று மக்கள் நம்புமாறு ஏடுகள் பல முன்னாளில் தீட்டப்பட்டு, ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. பூர்வ புண்ணிய வசத்தால் அவன் பூபதியானான் என்று எண்ணினர் மக்கள். எனவே மன்னனிடம் பயம் மட்டுமல்ல, பக்தியும் காட்டினர். அவனடி பணிவது ஆண்டவனுக்குப் பிரியமான பணி என்று கருதினர். ஆண்டவனுக்கு அடுத்த தட்டிலே அரசனை வைத்தனர். ஆலயம் ஆண்டவனுக்கு, அரண்மனை அரசனுக்கு, இருவரும் ஆராதனைக்குரியவர்கள் என்றே கொண்டனர்.

கெட்ட குணமுள்ளவன் மன்னனானால் கூடச் சகித்துக்கொள்ளவும், அவனுக்கு நல்லறிவு தர வேண்டுமென்று நாதனைத் துதிக்கவும் மக்கள் முயன்றனரே யொழிய, இப்படிப்பட்டவனுடைய ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று கிளம்பினதில்லை. அந்த எண்ணமே தோன்றினதில்லை. இங்கு மட்டுமல்ல எங்கும்!

சதி செய்து முடிபெற்றவன், தந்தையைக் காராக்கிரகத்தில் தள்ளினவன், தம்பி தலையைக் கொய்தவன், தாயை அலைய வைத்தவன், நஞ்சிட்டு நம்பின

(11-ம் பக்கம் பார்க்க)

12-ம் பக்கத் தொடர்ச்சி

ரை ஒரு மன்னன் எதிர்த்தால், ன்னொருவன் ஆதரிப்பான். வனொருவன் பிரஞ்சுக்காரனுக் ப்பின்னேடும் பிள்ளையாவான். றிதொருவான் டச்சுக்காரனு ன் குலவுவான். நாட்டை, தில் வாழும் மக்களை, கலகம், ஞ்சம், கொடுநோய், கொள்ளை, டை எடுப்பு ஆகியவைகளி ன்றும் காப்பாற்றவுந் தவறிய காடு, தத்தமது அரசுகளுக்கு ந்த ஆபத்துகளைத் தடுத்துக் காள்ளும் வகையுமின்றிப் பாயினர். வெள்ளை ஏகாதிபத் ம், பரவுவதைக்கண்டும், ஏதும் சய்யமுடியாமல், ஒருவர்க்குத் தரியாமல் மற்றவர், இரகசிய ாகவும் அவசரமாகவும், தத் மது கிரீடத்தைக் காப்பாற்றிக் காள்வதற்காக வெள்ளைக்கார டம் ஒப்பந்தங்கள் செய்து காண்டார்கள். இதுபோல டிமைச்சீட்டிலே கையொப்ப ட்டுவிட்டு இன்று அலங்காரப் பாம்மைகளாக விளங்கிடும் ரசர் கும்பலுக்கு, நாளை, ஏகா பத்யம் தரும்பாதுகாப்புநீங்கி தும், மதிப்பும் செல்வாக்கும் ப்படி இருக்கமுடியும்? இதனை, க்கள் மனநிலையை அறிந்தோர் ன்கறிவர்.

சாரவாக் மன்னராக இருந்தப்ரூக் ரை, சமஸ்தானாதிபதிகளின் எதிர் லம் நன்றாக இருக்கமுடியாது என் தை அறிந்தேதான், ராஜ்யத்தை ரிட்டிஷ் பகுதியுடன் இணைத்து ம்படிக் கேட்டுக்கொண்டான். டுரைத் துவக்கத்திலே காணப் ம் படம், ப்ரூக், சாரவாக்கை ரிட்டிஷ் நிர்வாகத்துக்கு ஒப்படைக் ம் செயலைக்காட்டுவதுதான். விவே ள், வருமுன் தெரிந்து கொள்கின் ர் அதற்கேற்றபடி நடந்துகொள் றனர். இங்கோ, ஓட்டி ராஜாக் மட்டுமல்ல, அவர்களின் கொடுக் ளாக உள்ள திவான்களோ சல்ல ம் கட்டிக்கொண்டு ஆடுகிறார்கள், அரசர்க்கே ஆதிபத்ய ஆதிக்க உரிமை உண்டு என்று. சர். சி. பி. ஒருபடி மேலேறி, அசல் புரோகிதப் புத்தி யுடன் பேசுகிறார் — திருவிதாங்கூர் ஆட்சி உரிமையும், பூரண அதிகார மும் மன்னருக்கே, மக்களுக்கு அல்ல; மன்னனும் அந்த உரிமையையும் அதி காரத்தையும், ஸ்ரீபத்மநாபசாமியிட மிருந்து பெறுகிறார், என்று அரண் மனைக்கும் ஆலயத்துக்கும் முடிச்சு இருக்கிறது என்று கவனப்படுத்துகி ருர். இவர்மட்டுமென்ன! சர்ச்சில் துரை இன்னமும் கூடத்தான் கருது கிறார், இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கும், துண்டிக்கமுடி யாதபடி மூலவனே 'முடிச்சு, போட் டிருப்பதாக. பொழுது விடிந்ததும் "முன்செல்லாம், இன்னநாடு கிடைத் தது, இந்தராஜ்யத்தில் அதிகாரம் நிலை நாட்டப்பட்டது என்ற செய்தி களைக் கேட்டவண்ணம் இருந்தோம், அதற்கு நேர்மாறாக இப்போது ஒவ் வோர் நாளும், ஏதாவதொரு நாடு நமது பிடியிலிருந்து போய்விடுகிற துக்ககரமான செய்தியைக் கேள்விப் படுகிறோமே!'' என்று சர்ச்சில் சோகிக்கிறார். அவருடைய அழுகுரல் கேட்டு, ஆங்காங்கு கிளம்பியுள்ளவிடு தலைக் கிளர்ச்சி ஓய்ந்தாவிடும்! அது போலவேதான், அரண்மனைக்கும் ஆலயத்துக்கும் இணைத்துப் பேசியும், அரசன் ஆண்டவனின் பிரதிநிதி என்ற காடிக்கொள்கையை எடுத்துக் காட்டியும் சர். சி. பி. பேசினாலும், சமஸ்தான மக்களின் விடுதலைக்கிளர் ச்சி அடங்கிவிடாது. இந்தஅரசர்கள், இப்படிப்பட்ட அதிகார வெறியர் களின் போதனையைக் கேட்டு, மக்க ளின் கிளர்ச்சியை அடக்கிவிடலாம் என்று மனப்பால் குடித்தால், வீணில் தொல்லையும் துயரமும் அவர்களைத் துரத்தும்—ஏகாதிபத்யப் பிடிநீங்கின தும். துரத்துவதோடு முடியாது, இவர்களைத் தொலைத்துவிடும். "வல் லமை பொருந்திய" ஏகாதிபத்யமே இன்று 'வாய்க்கரிசி' பெற வேண்டிய நிலையில் இருக்கும்போது, நாடக மேடைராஜாக்களிடம் காணப்படும் 'முடுக்கும்' இல்லாமல், மக்களைமறந் துள்ள இம்மன்னர்களின் கொட்டம், நிலைத்திருக்க முடியுமா! சர். சி. பி. ஏற்கனவே மன்னரின் பெயரைக் கெடுக்குமளவு, மக்களின் கொதிப் பைத் தமது அடக்குமுறையினுல் கிளறிவிட்டிருக்கிறார். எனவேதான், அவர் திவான் வேலையைவிட்டு விலகு கிறார் என்று தெரிந்ததும், மக்கள், மகிழ்ந்தனர், விடுதலைநாள் கொண்டா டினர். மீண்டும் வேதாளம் முருக்க மரமேறிக்கொண்டது எனும் கதை போல, சர். சி. பி. இன்னமும் கொஞ்ச நாட்களுக்குத் திவானாக இருக்கப் போகிறாராம்! ஏனோ! மக்க ளின் மனதைத்தமது அடக்கு முறை யினுல் புண்ணாக்கியதோடு, மன்னரின் அதிகாரம் ஈடு இல்லாதது, மக்களுக் குக் கிடையாத அந்த அதிகாரம் என்ற, திமிர்வாதக் கொள்கையைப் பேசி, ஏற்கனவே கொதிப்படைந்த மக்களுக்குமேலும் ஆத்திர மூட்டுவ தோடு, அரசியல் தத்துவங்களிலே அநாகரீகக்காலத்தது என்று ஒதுக்கித் தள்ளப்பட்டதும், அறிஞர்கள் எள்ளி நகைபாடிக் கண்டித்ததும், கவைக்கு உதவாததும், காலத்திற்கு ஒவ்வாதது மான, மன்னன் ஆண்டவனின் பிரதி நிதி எனும் தத்துவத்தைப் பேசுவ தன் மூலம், விடுதலை விரும்பிகளின் வெறுப்புக்கு ஆளாகிறார். மாண்டு போன கழுதையைத் தோளிலே சுமந்துகொண்டு, மார்க்கட்டுக்குச் செல்பவன், மதியிலி! அரசியல் அமைப்புக்கான தத்துவ ஆராய்ச்சி கள் அமோகமாக நடைபெற்று, மன் னன் என்றால் மக்களின் சம்மதத் தின் பேரில், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் மக்களுக் காக ஆட்சிப்பணி புரியும் பொறுப் பினை ஏற்றுக் கொண்டவன் என்ற கொள்கை எங்கும் எந்த அறிஞரா லும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்நாட் களில், சர். சி. பி. இந்தஅரசன்ஆண்ட வனின் அருள்பெற்றதால் அதிகாரம் பெற்றான் என்ற கோட்பாட்டைச் சுமந்து திரிகிறார். இதற்குத் துணை செய்ய, ஆற்காட்டு இராமசாமியா ரும், தோள் கொடுக்கிறார் இவர்கள் 'சேவை' செய்யும் இடம் சுதேசசமஸ் தானங்களாக இருப்பதாலேயே, எஜ மானனிடம் பக்திகாட்டிப் பலன் பெறுவதற்காக, மக்களின் உரிமை களையும் மாய்க்கும் மாபாதகம் புரி கின்றனர். மன்னர்களின் ஆட்சிக் காலமல்ல இது. மக்களின் ஆட்சி உதிக்கும் காலம். எல்லோரும் இந் நாட்டு மன்னர், என்றார் பாரதியார்!

அது எங்ஙனம் என்பதைத் தமது புரட்சிக்கவிதையிலே, பாரதிதாசன் விளக்கினார். இந்தச் 'சர்கள்' சட்டச் சந்துகளுக்குள்ளும், வியாக்யான வளைவுகளுக்குள்ளும் நுழைந்துகொண்டு, மன்னர்கள் ஜீவிக்கலாம் என்று எண்ணுகிறார்கள்! அவர்கள் சட்டத்தை மட்டுமே அறிந்தவர்கள்; சட்டத்தை ஆக்கவும் அழிக்கவும் புதுப்பிக்கவும் உரிமை மட்டுமல்ல, ஆற்றலும் பெற்றவர்கள் மக்கள் என்பதை அவர்கள் அறியவில்லை, மக்களிடம் அதிகத் தொடர்பு இல்லாமல், மன்னர்களிடம் அதிக, பலமாகத் தொடர்புவைத்துக்கொண்டிருப்பதால்.

ப்யூட்எனும் மந்திரி, மன்னனாக இரு! என்று மூன்றும் ஜார்ஜுக்குக் கூறிவந்த முறையிலே சர். சி. பி. திருவிதாங்கூர் மன்னருக்குக் கூறிக்கொண்டிருக்கக்கூடும். ப்யூட்டுக்கு இருந்த அளவு செல்வாக்கு சர். சி. பி. க்கும் அங்கு இருக்கவும் கூடும். ஆனால் இப்போது மக்கள், மகனாக வாழ விரும்புகிறார்கள். அதன் மாண்பு என்ன என்பதைத் தெரிந்து கொண்டுள்ளார்கள். எனவே இந்தப் பூஜாரியின் துணை கொண்டு ராஜாதி ராஜர்களாக, அலங்கார புருஷர்கள், மக்களை அடக்கி ஒடுக்கிக் காலந்தள்ள முடியாது. காலம் மாறிவிட்டது! மாறிக்கொண்டு வருகிறது! மாறுவதைத் தடுத்து நிறுத்த முடியாது, லெப்டினண்டு ஜெனரல், பீல்டுமார்ஷல்பட்டம் சூட்டிக் கொண்டாலுங் கூட!!

——

## "தொழிலாளர் மித்திரன்"

## அறிவிப்பு

அச்சுக்கூடத்தகராறின் காரணமாக நமது "தொழிலாளர்மித்திரன்" தற்காலிகமாகச் சிலவாரங்கள்வரை நிறுத்தப்பட்டிருக்கிறது. 18-1-47 தேதியிலிருந்து வழக்கம்போல்வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு:— ஏஜண்டுத் தோழர்கள் இதற்குள், நமக்கு அனுப்பவேண்டிய பாக்கிகளை அனுப்பித்தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

**காஞ்சி கல்யாணசுந்தரம்,**
ஆசிரியர்.

ஆசிரியருக்குக்கடிதம்!

## எழுத்தாளர் மாநாடு

——

சென்னையில்; 14,15—12—46, ஆகிய இருநாட்களில் எழுத்தாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த இரண்டாவது மகாநாடு சர்வகட்சி எழுத்தாளர்களைக் கொண்டதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பேனா முனைகளின் மூலம் கருத்தைத் தீட்டுபவர்களும், புரட்சியை உண்டு பண்ணுபவர்களும், மக்களை இன்னும் மூடநம்பிக்கையில் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் பதிந்தவர்களும் வந்திருந்தார்கள். பேனாபலம் பொருந்திய மாநாட்டில் தமிழ்நாட்டின் இருஅமைச்சர்களும் வந்திருந்தார்கள். இம்மாநாட்டில் தமிழ்நாடு பிரிவினைப்பிரச்சனை, திராவிட(தமிழ்) எழுத்தாளர்கள் முக்யத்வம் பெறுதல் தமிழர்கள் மகிழும் வண்ணம் நடந்தன. ஆனால் இன்னும் பல அறிஞர்கள் வருந்தத்தக்க விஷயத்தில் பழையபல்லவியைப்பாடுகிறார்கள் தோல்வி மனப்பான்மையுடன். ஆரியமோகத்தில் அழுந்தியிருக்கும் அவர்களுக்கு இன எழுச்சி நாடியின் தன்மை எங்ஙனம் தெரியும்? கவிஞர் நாமக்கல்கல்லார் ஆரியம் எது, திராவிடர் எது என்று குழப்பி இருக்கிறார், மற்றவைகளைக் குழப்புவதைப் போல். இதற்குச் சிறுபிள்ளையும்பதில் சொல்லும் ஆனால் கவிஞர் பிடிவாத மனப்பான்மையை விடவேண்டும் திராவிடர் நலனுக்காக. நாள்தோறும் காணும் ஆரியதிராவிடபேதம் கவிஞர் கற்பனசக்திக்குப் புலப்படவில்லை போலும்! கோயில், குளம், சாப்பாட்டு விடுதி, பள்ளிக்கூடம், கோர்ட், சரித்திரப்புத்தகம்முதலியவைகளைப்பார்த்தாலும் தெரியுமே? கோயில் சிலையருகில் நின்று கத்துபவன் ஆரியன், வெளியிலிருந்து அஞ்சலி செய்பவன் திராவிடன், திவசம் பெறுபவன் ஆரியன், அதைநம்புபவன் திராவிடன். ஆரியன் வைகுண்டத்திற்கு வழிகாட்டுபவன், வைகுண்டம்இருக்கிறதென்று நம்புகிறவன் திராவிடன். ஆரியன்மொழி சமஸ்கிருதம் திராவிடன் மொழி தமிழ் கலையை கொலைசெய்தவன் ஆரியன். கலையை காப்பாற்றியவன் தமிழன். ஆரியதிராவிட பேதம் இல்லை யென்றால், சரித்திரபுத்தகம் இரு வகுப்பார்களைப்பற்றியும் அவர்களின் தன்மைகளைப்பற்றியும் முதல்வகுப்பு முதல் கலாசாலைகள் முடிவுவரை என்போதிக்கிறது ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய் என்று ஒருபுலவன் சொன்னதை கவிஞர் மறந்துவிட்டாரா? ஆரியர்கள் வந்ததுமுதல் யாதும் ஊரேயாவரும் கேளிர் என்ற திடசித்தம்மறைந்தது. இதைமறுப்பாரா கவிஞர் நாட்டைப் பிளவுபடுத்த நான்கு வர்ணங்கள் ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் நூல்கள் அதை ஆமோதிக்கின்ற வண்ணம் இருப்பதைத் தடுக்க நாமக்கல்லார் எடுத்த நடவடிக்கை என்ன? இவைகள் இப்படியே இருந்தால் திராவிடர் தமிழர் நலத்திற்கு ஊனம் என்றால், கட்சி கொள்கை என்றும் வகுப்புவாதம் என்றும் தேசவிடுதலைக்கு முட்டுக்கட்டை என்றும் கவிஞர் நம்பினால் அது அவரைத்தான் ஏமாற்றிவிடும் இனியாகிலும் இது போன்ற சொத்தை வாதங்களை கவிஞர், அவர் நலனுக்காகவும், திராவிடர் நலனுக்காகவும் விட்டுவிட்டுத் திராவிடர் கழகத்தில் சேரவேண்டும் என்பது எனது அவா. தமிழ்நாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தைக் கிராமணியர் எடுத்து வந்தபோது அதை எதிர்த்தவர் ஒரு ஆரியர். ஆகையால் இதை எண்ணி யாவது கிராமணியர் ஆரியர்களை அகற்றி, திராவிடர்களோடு ஒன்றுபட்டுத்தமிழ்நாட்டுப் பிரிவினையை ஊர்ஜிதம் செய்யவேண்டும்.

இப்படிக்கு

**செ. ஷண்முகசுந்தரம் பி.**
சென்னை.

——

# புத்தாண்டு வாழ்த்து!

பாலிசிதாரர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும், பங்குதாரர்களுக்கும் எங்கள்

**புதுவருஷ வாழ்த்துக்கள்**

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரென்ஸ் சொஸைடி லிமிடெட்,
தலைமை ஆபீசு, கோயமுத்தூர்,

சேர்மென்,
திரு. வி.சி.வேள்ளிங்கிரிகவுண்டர், எம்.எல்.ஏ. சென்ட்ரல்.

மானேஜிங் டைரெக்டர்,
ராவ்சாகிப் எம். எஸ். பழனியப்பமுதலியார், பி. ஏ.
சி. ஆர். சிவசுப்ரமண்யம், பி. ஏ. செக்ரெடரி.


## அந்த அழைப்பு

"தூத்துக்குடி ஹார்வி மில்லில் வேலை பார்க்கும் 4,400 தொழிலாளர்களும் தங்களுடைய நியாயமான உரிமைக்காகப் பல நாட்கள் எதிர்பார்த்தும் மானேஜ்மெண்டாராலும் சர்க்காராலும் எந்தவித சமாதானமும் ஏற்படாது போகவே 26—12—'46 முதல் பூரண வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தில் ஹெட் மேஸ்திரி முதல் சாதாரண அரை நேரத் தொழிலாளிவரை ஒருவரும் வேலைக்குப் போகவில்லை. மில் மூடி யிருக்கிறது. தொழிலாளர் அமைதியாக இருந்து வருகிறார்கள். கட்சி பேதமின்றி எல்லா அரசியல் கட்சியினரும் ஒத்துழைக்கின்றனர்."

தோழர்களே! உங்கள் கோரிக்கை நியாயமானது ஒற்றுமை பாராட்டக் கூடியது.

லேபர் கமிஷனரிடம், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் மாகாண அமைச்சரிடம் முறையிட்டீர்கள். பலன் இல்லை. கைவிடப் பட்டீர்கள். கலங்கவில்லை. பொதுமக்களிடம் முறையிட்டுக் கொண்டீர்கள்.

நெல்லை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, நெல்லை மாவட்டத்திராவிடர் கழகம், கம்யூனிஸ்டு கட்சி, மாணவர் இயக்கம், எனும் பல்வேறு கழகங்களும், உங்கள் கோரிக்கையை ஆதரிக்கின்றன.

மற்ற எந்த ஊரிலும் தொழிலாளர் அடையாத மகத்தான வெற்றியை அடைந்து விட்டீர்கள். எனவே நிமிர்ந்து நின்று, கேளுங்கள், உரிமையைப் பறிக்காதே, உழைப்பாளியின் வயிறு எரியச் செய்யாதே, பாட்டாளியை பாழ்படுத்தாதே, பாரிலே, பாட்டாளியின் கரம் வலுத்து வருவதைப் பார், என்று எடுத்துக் கூறுங்கள்.

அமைதி—உறுதி—இரண்டும் சம எடையில் கலந்து, காட்டுங்கள்.

கிள்ளிவிட்டு விடச் சிலர் வருவர்; கிலி கிளப்புவர் சிலர்; மயங்காதீர்! வலையிலே வீழ்ந்து பலாத்காரச் சேற்றிலே விழாதீர். இன்றைய சர்க்கார், தொழிலாளியை அடக்கி அடக்கி ருசி கண்டது. ஆம்! ஆகவே, முன்னிலும் பன்மடங்கு உறுதியுடன் இருக்கட்டும் அணி வகுப்பு. வெற்றி உமக்கே—நிச்சயம்.

திராவிடர் கழகத் தோழர்களே! பாட்டாளிக்குத் தக்கதோர் அரணாக இருங்கள். பணம் திரட்டித் தாருங்கள். பிரச்சார பலத்தைத் தாருங்கள். பொய்யுரை பரவாமல் தடுத்துவாருங்கள். கட்சிகளுக்குள் உள்ள கொள்கை பேதம் இருக்கட்டும் ஓர்புறம்—இதோ கஷ்டப்பட்டுழைக்கும் தொழிலாளர்களின், வியர்வையும் கண்ணீரும் அழைக்கிறது, எமக்காகப் பணி புரிய வருக என்று.

அந்த அழைப்பை ஏற்க மறுப்பவன், பொதுநல ஊழியனல்ல,பொன் போன்ற கொள்கைக்காரனானாலும், பூமி அதிரப்போரிடும் போக்கினனானாலும்.

ஒன்றுபட்டு நின்று வெற்றிபெறுக.


**12—1—47ல்**

பெரியார்—கிராமசீர்திருத்தம்

பெரியாரின்

அண்ணா— நாட்டு வைத்யம்

**பாரதிதாசன் பாடல்**

கைதிகள்

நாடி

தீட்டுத்துணி — பொங்கல் இனம்

முதலிய சிறுகதைகள்

ஜெமீன்முறை-பண்ணையார்-புதியதிட்டம்

முதலிய பொருளாதாரக் கட்டுரைகள்.

விழா— கம்பன் கண்டது!

மற்றும்பல உண்டு.

இன்றே இதழ் எவ்வளவு தேவை என்பது குறித்து எழுதுக.


## தோழர்களுக்கு

5—1—47-ல் வெளிவரவேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, 12—1—47ல் வெளிவரும் இதழுடன் இணைக்கப்பட்டு அதிகபக்கங்களுடனும், சித்திரம், சிறுகதை, கவிதை, கட்டுரைகளுடனும் வெளியிடப்படும்.

**இதழின் விலை 0—4—0**

ஏஜண்டுத் தோழர்கள், உடனே, தங்களுக்குத் தேவைப்படும், இதழ்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

திராவிட நாடு

காஞ்சி] 29—12—46 [ஞாயிறு

# நல்ல யோசனை

★

சேலம் மாவட்டத்திலே, இரும்புச் சுரங்கங்கள் உள்ளன. புதைபொருள் நுணுக்க முணர்ந்தோர் பன்னெடுங்காலத்துக்கு முன்பே இதனைக் கூறியுள்ளனர். நமது இதழிலேயும் இதுபற்றிப் பன்முறை எழுதினோம். இந்தச் சுரங்கங்களைத் தோண்டி, இரும்பு எடுத்து, நல்லதோர் தொழிற்சாலை நிறுவலாம்—ஆணி முதற்கொண்டு தண்டவாளம் வரையிலே, டாட்டா கம்பெனியின் தயவிலேவாழும் கேவலநிலையைப் போக்கிக் கொள்ளலாம் என்று யோசனை கூறினோம். திராவிடநாடு திராவிடருக்கே என்ற மூலமுழக்கத்தின் நோக்கமும், பொருளாதாரப் பொறியினைவடநாட்டார் அமைத்து அதிலே திராவிடத்தைச் சிறைப்படுத்தி வைத்துள்ள கொடுமையினின்றும் விலகுவது என்பதுதான்.

நமது மக்களோ, எந்தப் பொருள்எப்பூபாகத்தது, வெளிநாட்டவரின் பொருளை நாம் விரும்பிக் கொள்வதால் வரும் கேடு என்ன என்பதனை ஆராய்ந்தறிய நேரமோ நினைப்போ கொண்டவரல்ல. அதனை அறிந்தோரோ, ஏதேனும் அலுவலகத்திலே பணியாற்றிவிட்டு நாற்பதில் அறுபது வயதினரின் இயல்பு பெற்று, நாராயணா கோவிந்தா என்று பஜனைசெய்து போகிறது நல்லதாக இருக்கட்டும் என்ற போக்குடன்உள்ளனர். பத்திரிகைகளோ, பாரிலே உள்ள பலபிரச்னைகளைப் பெய்த்து எறிகின்றனவேயன்றி, திராவிடம் பொருளாதாரத் துறையிலே தேய்ந்து வருவது பற்றித்தீட்டுவதில்லை. இந்நிலையில் இங்குபலப்பல நூற்றாண்டுகட்கு முன்பு புதைபட்ட பொருளெலாம், தேடுவாரற்றுக் கிடக்கின்றன. நமக்கென ஓர் தனி அரசு இருக்குமானால், இவைகளைக்கண்டறிய ஓர்குழு அமைக்கலாம். இதற்கே, திராவிடநாடு திராவிடருக்கே என்கிறோம். வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்யத்துக்கு அடிமைப் பட்டிருத்தலாகாது என்பது, நமது நோக்கம், நாட்டின் நல்வாழ்வு நோக்குடையோர் எவரும் இதனை மறக்க முடியாது.

இன்று டாட்டா கம்பெனியாருக்குஉள்ள செல்வாக்கு, சொல்லுந்தரத்ததல்ல. சர்க்காரின் அலுவலகத்தைப்போல், விரிவான அலுவலகம். மேனாட்டுக் கம்பெனிகள் கூட, இந்த டாட்டா கம்பெனிக்கு உள்ள அளவு விரிவான மார்க்கட்பெறவில்லை. பிரான்சிலே இருக்கும் ஓர் கம்பெனி ஜெர்மனிக்கு, அண்டை நாட்டுக்குச் சாமான் அனுப்புவது என்றாலும், 'சுங்கம்' உண்டு; அதற்கான சட்டதிட்டம் உண்டு. டாட்டாவோ, இமயமலைமுதல் கன்னியாகுமரி வரை, ஏறக்குறைய 2000-மைல் நீளம் 1500-மைல் அகலமுள்ள பூபாகத்திலே, தன் ஆட்சியைத் தங்குதடையின்றிச் செலுத்துகிறது. ஐரோப்பாக்கண்டத்திலே, ரஷியாப்பகுதி நீங்கலாகஉள்ள மற்ற இடமுழுவதும் ஒருகம்பெனி இருந்துகொண்டு வியாபாரக்கொடி நாட்டினால், அதனைச் சகிக்க முடியாத பொருளாதார ஏகபோக மிராசுஎன்று கூறுவர்—கண்டிப்பர். இங்கு டாட்டாவுக்கு இருக்கும் ஆதிக்கம், அத்தகையதுதான். ஒரு பெரிய உபகண்டம் முழுவதும்

அதற்கு மார்க்கட்! அதற்கு
போட்டியாக வேறோர் க
ெனிகிடையாது — வேறு
இரும்புத் தொழிற்சாலைகிடை
யாது எவ்வளவு இலாபம் கு
திருக்கவேண்டும் போட்டியே
இல்லாத நிலையில் இவ்வள
பரந்த மார்க்கட்டில் "ஏகச
ராதிபதியாக" இருப்பதால் எ
பதை எண்ணிப்பார்க்கவேண்
கிறோம்.

என்ன செய்யலாம்! இங்
இரும்புஇல்லை. இரும்பினை உரு
கிடுவதற்குத் தேவையான நி
கரிஇல்லை என்று நம் மக்கள்கூ
வர்—ஏனெனில் அவர்கள்க
முன் இரும்பும் நிலக்கரியு
தெரியவில்லை! சேலத்திலே
இரும்பு கிடைக்கிறது; தென்ஆ
காட்டில் சிற்சில பகுதிகளி
நிலக்கரி இருக்கிறது. எல்லா
புதைபொருளாகஉள்ளன. தக்
முறையைக் கையாண்டா
இவைகளை எடுத்துப் பயன்படு
தலாம். இதுவரை இதனைப்பற்
எண்ணினவர் இல்லை. ஏளன
செய்யப்படும் திராவிடர் கழக
தார், பன்முறை இதனைஎடுத்
ரைத்தபோதுகூட, இங்காவ
இரும்பாவது, கிடைப்பதாவ
என்று பேசினோரே அதிகம்
அவர்கள் மீது குற்றமில்லை கண்
எதிரே காணப்படும் கரும்பு
இருக்க, ஜாவாவிலிருந்து சர்
கரை வரவழைத்தவர்கள்தானே
நமது நாட்டுப் பருத்தியை
நூலாக்கிவடநாட்டுக்கு அனுப்பி
அவன் அனுப்பும் வேட்டிக்கு
காத்துக் கிடப்பவர்கள்தானே
கண்எதிரே தெரிவதற்கே இ
தக்கதி என்றால், கண்ணுக்குத்
தெரியாமல், பூமிக்கடியிலே ப
நூறு அடிகளுக்குக் கீழேதா
கிக்கிடக்கும் பொருளைப்பற்றி
அவர்கள் என்கவலைப்பட
போகிறார்கள்! எனவேதான்
அவர்கள் கவலையற்று இருந்த
னர். ஆளவந்தார்கள் கவனிக்க
வேண்டிய காரியம் இது. நமது

நாட்டிலே எங்கெங்கு என்னென்ன பொருள்கிடைக்கும் என்பதனைக் கண்டறிய ஒரு அமைப்பு இருக்கவேண்டும். அந்த அமைப்பு திட்டங்களைத் தயாரித்தபடி இருக்கவேண்டும். முன்பு இருந்ததைவிட இவற்றினுக்கான, விஞ்ஞான சாதனங்கள் இப்போது மிகமிகத்திறமையுடையனவாகி உள்ளன, நல்ல வாய்ப்பிருக்கிறது. மனம் வேண்டும், கொஞ்சம் துணிவுவேண்டும், இவற்றினுக்கு மேலாக, வடநாட்டுப்போட்டியைச்சமாளிக்கும் வழிவகை தெரியவேண்டும்.

சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்பை எடுத்துத் தொழில் நடத்த, சர்க்கார் யோசிப்பதாகக் கேள்விப்படுகிறோம். நல்ல யோசனை. உடனடியாகத் துவக்கப்படவேண்டியவேலை. ஆனால், இதற்கான திட்டம் தீட்டப்படும்போது, இதற்காகச் செலவாகும் பணத்துக்கு ஏற்ற அளவு ஈடாக இலாபம்வருமா என்று புள்ளிபோட்டுப்பார்த்து, இலாபம் வராது, ஆகவே இதனைத் துவக்கத் தேவையில்லை என்று கூறிவிடக்கூடும். பல முறை, பலதிட்டங்களை இத்தகையகாரணம் காட்டியே கைவிட்டு விட்டனர். புள்ளிவிவரம் போடும்போது, நமக்குத் தேவையான பொருளை நாமே உற்பத்தி செய்துகொள்வதனால் ஏற்படும், மதிப்பு இருக்கிறதே, அதற்கு இடம்தருவதில்லை. அது தவறு.

துவக்கியபிறகும் ஓர் பெரிய தொல்லை இருக்கிறது. ஏற்கனவே வளர்ந்து, பெரும் பொருளை இலாபமாகக் குவித்து வைத்துக்கொண்டுள்ள டாட்டா கம்பெனி சும்மா இராது. போட்டியிடும் கடுமையாக. நாம் ஐந்து ரூபாய்க்கு விற்றால் மட்டுமே, அடக்கவிலைக்குமேல் ஒரு நாலணா கூடுதலாக கிடைக்கக்கூடிய பொருளை, நாலு ரூபாய்க்கு டாட்டாவால் விற்க முடியும். மலிவான பொருள்விற்பனையாகி, நமது பொருள் தேக்கமாகி, நஷ்டமேற்பட்டு, தொழில் நசித்துவிடும். இந்தப் பேராபத்தைத் தவிர்க்கவேண்டும். ஈரஆடையை உலர்த்த வேண்டுமானால், பக்கத்திலே முள்செடி இல்லாமற் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா! அது போலவே துவக்கநிலையிலுள்ள தொழில் வளரவேண்டுமானால், பலத்தபோட்டியினின்றும் அதனைக் காப்பாற்றவேண்டும். இதற்கு, அந்தந்தப்பிரதேசத்திற்கு, தனது தொழில் வளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முறைவகுக்க தடைவிதிக்க, வரிபோட, சரக்குகள் வருவதையும் போவதையும் தடுக்க முழு உரிமை இருக்கவேண்டும். இந்த உரிமை இல்லாவிட்டால், நாம், பாடுபட்டு, ஆசைப்பட்டு, ஆரம்பிக்கும், புதிய தொழில்களை, ஏற்கனவே ஓங்கி வளர்ந்துள்ள வடநாட்டுத் தொழில் அரசர்களால், மிக எளிதிலே அழித்துவிடமுடியும். இந்த ஆபத்துக்குப்பயந்தே பலர், புதிய தொழில் துவக்காமலுள்ளனர்.

எனவே, புதைபொருள் சம்பந்தமாகவோ, விளைபொருள் சம்பந்தமாகவோ, விதவிதமானபுதுப் புது தொழிலைத் துவக்கிச், செல்வத்தை வளரச்செய்ய வேண்டுமானால், வடநாட்டுப் போட்டியிலிருந்து தப்புவதற்கு நமக்குப் பூரண உரிமை இருக்கவேண்டும். அந்த உரிமை முழக்கந்தான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது. ஆனால் அதுதான் நமது நாட்டுக் காங்கிரஸ்நண்பர்களுக்குப் பிடிக்காதே! என்ன செய்யலாம்!

"காகிதம் செய்வோம் நல்ல ஆலைகள் வைப்போம்"

என்று உள்ளக்கிளர்ச்சியுடன் அன்று பாரதியார் பாடினார். பாடி! அவர் காலத்திலே, டாட்டாவும் பிர்லாவும், டால்மியாவும் பஜாஜும், ஓங்கிவளரவில்லையே! அமைப்பது மட்டும் போதாது, வடநாட்டுத்தொழில் அரசர்களின் படையெடுப்பு நேரிடாவண்ணமும் தடுத்துக் கொள்வோம் என்று பாடாத காரணம் அதுதான். அவர்காலத்தில் இல்லாத நிலைமை இன்று ஏற்பட்டு விட்டது. எனவே இதற்கேற்ற திட்டம் தேவைப்படுகிறது. அந்தத் திட்டந்தான், திராவிடநாடு தனி அரசுரிமை பெறவேண்டுமென்பது. அசாமும் எல்லையுங்கூட தனித்து நாங்கள் வாழமுடியும், எங்களை எந்தத் தொகுதியிலும் சேர்க்க, திணிக்க, முடியாது, கூடாது என்று கூறுகின்றன. சென்னை மட்டுந்தான் வாய்திறக்கவில்லை. A தொகுதியிலே சிக்குண்டு கிடக்கச் சம்மதிக்கிறது! ஏன், எதிர்க்கப்போகிறது? சென்னையின் "கதியை" நிர்ணயிக்கும் பொறுப்புத்தான் இன்று, வடநாட்டு வணிகவேந்தர்களின் செல்லப்பிள்ளைகள் கையிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே! இந்நிலையில், புதை பொருளைத் தோண்டி என்ன பயன், புதை பொருளைத் தேடியென்ன கண்!


## செல்வி

கதை - கட்டுரை - கவிதைகள்
நிறைந்த
இலக்கியப் பத்திரிகை
வருடசந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி ரூ 0—4—0
ஏஜண்டில்லாத ஊர்களில்
ஏஜண்டுகள் தேவை.
விவரங்கட்கு:—
மானேஜர் "செல்வி"
நாகர்கோவில்.

# ★ ரங்கோன் ராதா ★

★

சௌமியன்.

என்மீதுதானே, உன்னப்பாவுக்குக் கோபம், வெறுப்பு, விரோதம் எல்லாம். தங்கத்திடம் பிரேமையோடுதானே இருக்கிறார். அவளிடம் அடங்கிக் கிடப்பார். ஆகவே அவளுக்கு இரகசியத்தைக் கூறி அனுப்பினால், அவள், அவரைத் தடுப்பாள், கோபத்தால் முடியாவிட்டால், புன்சிரிப்பால், இரண்டினாலும் முடியாவிட்டால் கண்ணீரால், என்று நினைத்தேன். ஆனால் மறுபடியும் ஒரு சந்தேகம் வந்தது. தனக்கும் அவருக்கும் உள்ள ஒற்றுமையைக் கெடுப்பதற்காக நான் ஏதோ சூது செய்கிறேன் என்று அவள் எண்ணிக்கொண்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். உண்மையாகவே, யாருக்கும் அம்மாதிரியான நினைப்புத்தானே தோன்றும். தங்கத்தினிடம் அன்பு கொண்டா, நான் சிந்தாமணியைப் பற்றி அவளுக்குக் கூறவேண்டுமென்று எண்ணினேன், எனக்கு இருந்த செல்வாக்குத், தங்கத்தால் பறிக்கப்பட்டுப் போய்விட்டது. அதனைப் பறித்துக் கொள்ளச் சிந்தாமணி வருகிறாள், எனவே சிந்தாமணியைப் பற்றித்தங்கத்துக்கு எச்சரிக்கை செய்வோம் என்று நான் நினைத்தேன். அவள் எப்படி நான் நல்ல கருத்தோடு இக்காரியம் செய்கிறேன் என்பதை நம்புவாள். சந்தேகப்பட்டால்? நம்ப மறுத்தால்! இவ்விதம் எண்ணிக் குழப்பினேன்.

இவ்வளவும் செய்தது, என் பொருட்டு அல்லடா மகனே! நான் அவரால் வெறுக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்பட்டு, ஒதுக்கித் தள்ளப்பட்டுப் போனேன். நான் குடி இருந்த அவருடைய மனதிலே தங்கம் குடி ஏறிவிட்டாள். அவளைத் தள்ளிவிட்டு, சிந்தாமணியாவது வரட்டும் காந்தாமணியாவது வரட்டும் என்று நான் இருந்துவிடக்கூடும். எனக்கு அது இலாப நஷ்டம் அற்ற விஷயம். ஒரு விதத்திலே பார்த்தால், இலாபமுங்கூட. சிந்தாமணியுடன் அவர் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கையிலே, தங்கம் அழுதுகொண்டிருப்பாளல்லவா! என்னை அழ வைத்தவளே! இதோ உன் முறை வந்துவிட்டது, அழு! அறிவற்றவளே! அன்பால் பிணைக்கப்பட்டிருந்த எங்களைப் பிரித்தாய் உன் சாகசத்தால், பார்த்தாயா, உன் சந்தோஷம் நிலைத்ததா? வந்துவிட்டாள் பாரடி உனக்கொரு சக்களத்தி என்று கூறிக் கேலி செய்யலாம். நான் ஏதோ கெட்ட சுபாவக்காரி, ஆகவேதான், அவர் என்னை வெறுத்துத் தள்ளிவிட்டுத் தங்கத்தைக் கலியாணம் செய்துகொண்டார், என்று பேசுகிறார்களே ஊரார், இப்போது என்ன சொல்வார்கள்! தங்கம், மகா அழகி, என்னைப் போல அவளுக்கொன்றும் பேயும் இல்லை நோயும் இல்லை, அன்பு கொண்டுதானே அவளைமணந்து கொண்டார், அப்படி இருந்தும் அவளை விட்டு வேறோர் மாதைத் தேடிக்கொண்டாரே, என்று பேசும்போது, என்னைப்பற்றிக் கொண்டுள்ள தவறான கருத்தை நீக்கிவிடுவார்கள், குற்றம் அவர் மீதுதான், என்மீதல்ல, என்று உணருவார்களல்லவா. அது கேட்டு நான் ஆனந்தமடையலாம், பெருமையு மடையலாம். சிந்தாமணியின் பிரவேசம், எனக்கு அந்தவிதத்திலே கவனித்தால் இலாபந்தான். ஆனால் மகனே! நான், என்னை மறந்துவிட்டேன்—நீ பிறந்ததும் என் சுகம், அந்தஸ்து இவைகளைப் பற்றிய எண்ணமே எனக்குப் போய்விட்டது. நான் வாழ்வது என்று தீர்மானித்ததே உன் பொருட்டு. உனக்காக என் சபதத்தைக் கூட நான் கைவிட்டுவிட்டேன். இந்தக் காரியத்தின் போதும், நான் உன்னைப் பற்றித் தான் எண்ணினேன். உனக்காகத்தான், சிந்தாமணி வரக்கூடாது என்று தீர்மானித்தேன். அவளும் வந்து சேர்ந்துவிட்டால் என் வாழ்வு மேலும் சீரழியுமே என்று இலேசாக என் மனதிலே பயம் தோன்றிய போது கூட, ஒரு கணம் என்னைப்பற்றிய நினைப்பு வரும், மறு கணம் உன்னைப்பற்றியே எண்ணுவேன். நான் சீரழிந்தால், சிந்துவாரற்றுப் போனால், என் செல்வம் என்னாவது? உன் நிலை என்ன ஆகும்! தந்தை காம வெறி தலைக்கேறி, குடும்பத்தை மறந்து திரிய, தாய் அழுது கொண்டிருப்பாளானால், குழந்தையின் நிலை என்ன ஆகும்! தெருக்கோடியில் கூவும் சிறு பிள்ளைகள், சுவரேறிக் குதிக்கும் பையன்கள், சிறு பொருளைத் திருடிவிட்டு அடி படும் பாலர்கள், எல்லாம், குடும்பத்திலே உள்ள கோணலின் விளைவுகள் தானே. சிறுவயதிலேயே, கடை வீதியிலும், சந்தைகளிலும், இரயிலிலும், பாடிக்கொண்டு வரும் பிச்சைக்காரப் பயல்களை நான் பார்த்திருக்கிறேன். வயிற்றிலடித்துக்கொண்டு, வறண்ட குரலிலே வாய்க்கு வந்ததைப் பாடிக்கொண்டு, வௌவால் போல, ரயிலுக்கு ரயில் தாவி, ரயில்வே அதிகாரிகளிடம் உதை

பட்டு, ரயிலில் போகிறவர்களிடம் அடிபட்டுக் கிடக்கும் அந்தச் சிறுவர்களின் முகத்திலே காணப்படும் சோகமும், உடலிலே உள்ள புண்ணும், காணச் சகியாததாக இல்லையா! அந்தச் சிறுவர்கள், குடும்ப ஒழுங்கு இல்லாததால், ஏற்பட்ட கேடுகளின் பயனாகத்தானே இங்ஙனமானார்கள் என்று நான் பல தடவை எண்ணியதுண்டு. அணைத்து ஆதரிக்க அன்னையும், தகாத வழி போகாமல் தடுத்து நல்வழி காட்டத் தந்தையும் இருந்திருந்தால், இவ்வளவு சிறு வயதிலே இந்தப் பயல்கள், இப்படி அலையவேண்டி நேரிடாதல்லவா என்று எண்ணி வருத்தமடைந்திருக்கிறேன். அதனாலே அந்தச் சிறுவர்களுக்குக்காலணா கொடுக்கலாம் என்று எண்ணுபவள், அரையணாவாகக்கொடுப்பேன். இந்தத் திருட்டுப் பயல்களுக்குச் சோத்துக்கு என்று நீ கொடுக்கிறாயம்மா, இதுகள்பீடி வாங்கிப் பிடித்துப் பிடித்து, மாரை உலரவைத்துக் கொள்கின்றன. இதுகளுக்குக் காசு கொடுப்பதே தவறு என்று எனக்குப் புத்தி கூறுவார்கள். அவர்கள் சொல்வதுபோல அந்தப் பயல்களும், கெட்ட வழக்கத்தைக் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும், முதலிலே அவர்கள் அந்தக் கதியானதற்குக் காரணம், குடும்பம் சரிவர இல்லாததுதான் என்பதே என் எண்ணம். யாரோ ஒரு பெரிய பிரசங்கியாம், சீமையிலே இருந்து வந்தாராம், அவர் கூட, இதுபோலத்தான் பேசினாரென்று, ஒரு தினம், எங்க ராதா கூடச் சொன்னாள்.

சிந்தாமணியின் பிரவேசத்தால் உன் அப்பாவின் சுபாவம் அடியோடு மாறிவிடுவதுடன், சொத்தும்போய்விட்டால், உன் கதி என்ன ஆகும் என்பதை எண்ணியே நான் ஏங்கினேன். குடும்பத்தை மறந்து, சொத்தை இழந்து, சிந்தாமணியின் பொம்மையாகிவிட்டால், பிறகு, உன்னைக் கவனிக்க முடியுமா அவரால்! சொத்தும் முழுதும் பாழாகிவிட்டால், பிறகு உனக்கு என்ன நிலை இருக்கமுடியும். அதனாலேதான் நான் பயந்தேன். சிந்தாமணியால் உன் வாழ்வு கெட்டுவிடுமே என்று அஞ்சினேன். உன்னைப் பராரியாக்கிவிடுவாரே அந்தப்பாவி என்று பயந்தேன். அதனாலேயே தங்கத்துக்காவது விஷயத்தைச் சொல்லி அனுப்பி, இந்த ஆபத்தைத்தடுக்க வேண்டுமென்று நினைத்தேன். அந்த எண்ணம், வேகமாகவளர்ந்தது. கிழவியிடம் யோசனை கேட்டேன், அவளும் அது சரியான யோசனைதான் என்றாள். ஆனால் ஒருதிருத்தம்செய்தாள். 'அம்மா! நீ எவ்வளவு நல்லவர்களிடம் சொல்லி அனுப்பினாலும், அவர்கள் ஒன்றுக்கு இரண்டாக்கித்தான் சொல்லிவிடுவார்கள். அதனால், காரியம் கெட்டுவிடக் கூடுமே. எதற்கும், விஷயம் முக்கியமானதாக இருப்பதால், குழந்தையின் நன்மையை உத்தேசித்து, நீயே சென்று தங்கத்திடம் சகல விஷயத்தையும் கூறினால் பலன் இருக்கும். இல்லையானால் கெட்டுவிடும்" என்று சொன்னாள். யோசித்துப் பார்த்ததில் அவள் யோசனை சரியென்றே எனக்குப் பட்டது, உன் பொருட்டு நான் அந்தத் தங்கத்திடம் சென்று வருவது என்று துணிந்தேன். என் வாழ்வைக் கெடுத்தவள்தான் தங்கம். இருந்தாலும், உன் வாழ்வு கெடாதபடி தடுக்கும் சக்தி அவளுக்கு இருந்தது. அதற்காக, அவளை அடுப்பது என்று துணிந்தேன். சென்றேன். துளிகூட என்னை அவள் எதிர்பார்க்கவில்லை அல்லவா! திடுக்கிட்டுப் போனாள் ஒரு விநாடி. மறு விநாடியே சமாளித்துக்கொண்டு, "வா, அக்கா" என்று வாய் குளிர அழைத்தாள். அவள்தான் அந்த வித்தையிலே கைதேர்ந்தவளாயிற்றே. கொஞ்சநேரம்பேசவே இல்லை நான். பிறகு சர்வ சாதாரணமான விஷயங்களைப் பேசினோம். "என்மீது உனக்குக் கோபம் இருப்பது சகஜம் அக்கா. ஆனால் நான் வேண்டுமென்றே உனக்கு ஒரு கெடுதியும் செய்ததில்லை. நீ அதை நம்ப மாட்டாய்" என்று உபசார வார்த்தை பேசினாள். நான்பதில் கூறவில்லை. என்ன கூற முடியும்; அவள் பசப்புகிறாள், எனக்கு அது பழக்கமில்லை. "அக்கா! குழந்தையை வந்து பார்க்க வேண்டுமென்று கொள்ளை ஆசை எனக்கு. வரலாம் என்று பல தடவைபுறப்பட்டேன். வந்தால், என்னுடன் நீ முகங்கொடுத்துப் பேசுவாயோ மாட்டாயோ, குழந்தையைத் தொடக்கூடாது என்று கூறி விடுவாயோ என்று எண்ணினேன். அத்தானைமட்டும் அடிக்கடி கேட்பேன், குழந்தை எப்படி இருக்கிறாளென்று" என்றாள். அத்தானைக் கேட்பாளாம்! அத்தான் என்ன பதில் கூறி இருக்க முடியும். உன்னைத்தான் அவர் கையிலே எடுத்ததே இல்லையே! சரி, என்னமோ சாகசம் பேசுகிறாள் பேசட்டும் என்று நான் எதற்கும் பதிலே கூறாமல் இருந்துவிட்டேன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு நான் மெள்ள விஷயத்தை ஆரம்பித்தேன். 'தங்கம்! உன்னிடம் அவர் பிரியமாக நடந்துகொள்கிறாரா?" என்று கேட்டேன். அவள் பதில் கூறவில்லை. முகத்திலே தோன்றிய புன்னகை பதிலளித்தது. "அக்கா! அவர் உன்னைக் கொடுமைப் படுத்துவதற்கு நானல்ல காரணம். இது சத்யம். நீ நம்ப மாட்டாய். கூடப் பிறந்தவளைக்

கொடுமைக்கு ஆளாக்கவேண்டுமென்று எந்தக் கன்னெஞ்சக் காரியும் எண்ணமாட்டாள். ஆனால் நான் என்ன சொன்னாலும் உனக்கு நம்பிக்கை ஏற்படாது" என்றுதங்கம், சமயத்தை நழுவவிடாமல் தன் கட்சியைப் பேசலானாள். நான் இடைமறித்து, "என் சுகதுக்கம் என்னோடு இருக்கட்டும் தங்கம். யாரால் எனக்கு இந்தக் கதி வந்தது என்பதைப் பற்றிய ஆராய்ச்சியை மறந்துகூட நெடுநாளாகி விட்டது. என்னமோ என்கதி அதுபோலாகிவிட்டது. நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதுகூடக்கிடையாது" என்று நான்கூறினேன். என்பேச்சிலே காணப்பட்ட சோகத்தை அவள் நன்றாகத் தெரிந்துகொண்டு, கொஞ்சநேரம் அசைவற்றுஇருந்தாள். பிறகு நான் மெதுவாக விஷயத்தின் முக்கியபகுதிக்குள் புகுந்தேன்.

"தங்கம்! ஆண்களின் சுபாவம் ஒரு நிலையானதல்ல. உன் அத்தான் என்னிடம், காட்டிய ஆசையைக் கண்டவர்கள், அவர் என்னை இப்படிக் கைவிடுவார் என்று கனவிலும் கருதியிருக்க முடியாது. அதுபோலவே உன்னிடம் அவர் வைத்திருக்கும் அன்பு எப்போதும் நிலைத்துஇருக்கும் என்று எண்ணிவிடாதே" என்றேன். பாவம்! அவள் என்ன பதில் கூறுவாள் அதற்கு. நான் வேண்டுமென்றே வலிச்சண்டைக்கு வந்திருக்கிறேன் என்றுகூட எண்ணிக்கொண்டிருந்திருப்பாள். "அது சரி அக்கா! இந்தஆண்களே இப்படித்தான்." என்று பொதுவாகப் பேசினாள். அவள் முகத்திலே இலேசாகப் பயம் தட்டியிருந்ததைக் கண்டேன். சரி என்றுமேற்கொண்டு பேச ஆரம்பித்தேன்.

"எதற்காகக் கூறுகிறேனென்றால், தங்கம்! அவரை, நீ என்னை விட்டுப் பிரித்து, உன்னிடம் சேர்த்துக் கொண்டாய். அந்தக் காரியத்தை வேறே ஒருவள் இப்போது செய்யக் கிளம்பிவிட்டாள். திகைத்து என்னடி பயன்! ஆண் மனம் அப்படிப் பட்டதுதான். என்னிடம் கொஞ்சிக் குலவுகிறாரே, அவர் என் வேறோர் மாதை நாடப் போகிறார் என்று சொல்லுவாய். பைத்யம்! உன்னை அவர் விரும்பியதற்கு ஒரு காரணம் இருக்கும், அதுபோல இன்னொருவளை விரும்புவதற்கு வேறோர் காரணம் இருக்கும். உன் அழகிலே மயங்கினதுபோல, இன்னொருவளின் பாட்டிலேயோ, நாட்டியத்திலேயோ மயங்கி இருக்கக் கூடும்." என்றேன். "அக்கா! நீ பேசுவது எனக்குப் புரியவில்லையே" என்றாள்.

"இது புரியவில்லையா உனக்கு. உன் அத்தானுக்குச் சிந்தாமணி என்றொருவள் சொக்குப்பொடி போட்டு வருகிறாள். சதா சர்வகாலம் சிந்தாமணி ஸ்மரணைதான். அவளைப்பற்றிக்கூற ஒரு தூதன் இருக்கிறான், அவனுக்கு உபசாரம் செய்துகொண்டிருக்கிறார் இவர். அவளிடம் அவர் கொண்டுள்ள மோகத்தின் அளவு சொல்லுந்தரத்ததல்ல அவளிடம்அவர் தஞ்சம் அடையத்தயாராகிவிட்டார். அப்படி நேரிட்டுவிட்டால், பிறகு, உன்கதியும் என்கதியேதான். குடும்பம் பாழாகும்—சொத்து அழியும்—பிறகு நாம் எல்லாம் பராரிகளாக வேண்டும். அல்லது அந்தச்சிந்தாமணிக்குப் பணிவிடை செய்துகொண்டு, உயிர் வாழவேண்டும். இந்த ஆபத்துத்தலைமீது இருக்கிறது. இதை முளையிலேயேகிள்ளி எறியாவிட்டால், பிறகு குடும்பமே நாசமாகும் என்பதைக் கூறிப்போகவே வந்தேன் எனக்கு அந்தச்செல்வாக்கு இல்லை உனக்காவது அவரைத்திருத்தும் செல்வாக்குஇருக்குமென்றுநம்பி வந்தேன். நாம் கெட்டுவிடுவதோடு முடியாது, நாளைக்கு உனக்கு ஒரு குழந்தை பிறந்தால், அதுவும் நடுத்தெருவிலே நிற்கவேண்டியதுதான். அந்தவிதமான கதிவரக்கூடாதே என்பதற்காகத்தான் நான் எச்சரிக்கை செய்து போகவந்தேன். அவளிடம் ஓரே அடியாக அவர் தஞ்சமடைவதற்குள், தடுத்துவிடு, இல்லையானால்'—என்று நான் சொன்ன உடனே, தங்கம் மேலும் பயந்தாள், "யாரக்கா அந்தச்சிந்தாமணி? எப்படி இருப்பாள்? எந்த ஊர்? என்ன வயது? எப்படி இவருக்குத் தெரிந்தாள்! என்று அடுக்கடுக்காகக் கேள்விகள் போட்டாள். எனக்கென்ன தெரியும்! அவளைப்பற்றி அந்தப்பாவியுடன் பேசிக்கொண்டிருந்தார், அதைக்கேட்டேன் அவ்வளவுதான். அவர் அவளைப்பற்றிப் பேசும்போது உருகுவதைக் கண்டு, நானூகித்துக்கொண்டேன் அவள் யாரோ பலே கைகாரியாக இருக்கவேண்டுமென்று. அவளை நான்பார்த்ததில்லை" என்றேன். என்னக்கா செய்வது இதற்கு? எப்படித்தடுப்பது? என்று தங்கம் என்னையே யோசனை கேட்கலானாள், பயப்படாமல் அவரைக்கேள், எனக்கும் துரோகஞ்செய்யாதே. ஒருவளைக்கெடுத்தது போதும் அவள் பொறுத்துக்கொண்டாள். நான் அவ்விதம் இருக்கமாட்டேன். ஊரறியக்கூறி உம்முடையமானத்தை வாங்கிவிடுவேன். ஒன்றுக்கு இரண்டு இருக்கிறது, மூன்றாவது தேடப் போகிறீரா இதுதான்யோக்யதையா? ஊரிலே பெரியமனிதர் என்றபெயர் இந்த இலட்சணத்தில்" என்று கண்டித்துக்கேளேன், என்ன பயம்" என்று யோசனை கூறினேன், கேட்கலாம் அக்கா, இன்னும் இதைவிடக் காரமாகவும்கோபமாகவுங்கூடக்கேட்கலாம். ஆனால் பலிக்கவேண்டுமே என்றாள்.

"தங்கம் நீயாக யோசனை செய்! என்ன திட்டம் போடுவாயோ தெரியாது. எப்படியாவது, இந்தஆபத்து ஏற்படாதபடி. தடுத்தாகவேண்டும். அடி அம்மா! என்பொருட்டு அல்லஇவ்வளவும். நான் ஒரு குழந்தை வைத்திருக்கிறேன். அதன் நன்மைக்காகத்தான் நான் வெட்கத்தைவிட்டு உன்னிடம் வந்து குறையைக்கூறினேன்" என்று சொல்லிவிட்டு, புறப்பட்டேன். தங்கத்தின் கண்களிலும் நீர் ததும்பிற்று.

(தொடரும்)

2-ம் பக்கத் தொடர்ச்சி

...வரைக் கொன்றவன், கன்னிரவில் நாரியரைக் கெடுப்பவன், கொண்ட மனைவியை உருக்குலைத்தவன், கொடிய தண்டனை மக்களுக்குத் தந்தவன், அறிஞர்களை அவதிக்குள்ளாக்கினவன், பெண்டிரைப் பாழ்படுத்தினவன் எனும் எவ்வளவோ வகையான மன்னர்களிடம் சிக்கிச் சீரழிந்தபோதும், சிந்தாகூலராகினரே யொழிய மக்கள் சீறிப் போரிட்டதில்லை. அரசனின் ஆற்றலுக்கு அஞ்சி அல்ல, ஆண்டவனின் சாபம் தம்மைத் தீண்டிடுமே என்று பயந்து; மன்னனுக்கு மதி அருளும்படி மகேஸ்வரனை வேண்டிக்கொள்வர்; பூஜை செய்வர்; புரட்சி செய்ததில்லை. அரசனை ஆளும் ஆற்றல் பெற்றவன் என்ற முறையிலே மட்டும் கொண்டிருந்திருப்பின் எதிர்ப்புணர்ச்சி எழுந்திருக்க முடியும். ஆனால் அரசனை ஓர் புண்ய புருஷன் என்று எண்ணினதால், எதிர்க்கும் எண்ணம் ஏற்பட்டதில்லை.

ஒரோர் சமயம், கொடுமை தாளமாட்டாமல், இன்னும் எவ்வளவு கன்னியரின் கற்பைச் சூறையாடுவதைக் கண்டு சகிப்பது, என்று கொதித்தெழுந்தாலுங்கூட, அந்த மன்னனின் கெடுமதியை மட்டுமே கண்டிப்பர்—அவன் தொலையவேண்டும் என்றுமட்டுமே பேசுவர்—அவனை மட்டுமே எதிர்ப்பர்—அரசப் பதவியை அல்ல! உரிமைக்காக அல்ல அவர்களின் உள்ளம் குமுறியது, உபத்திரவம் தாங்கமாட்டாமலிட்ட ஓலம் அது.

ஏன் ஒருவன் மன்னனாகவாழ வேண்டும்? எதற்காக அவனுடைய ஆணைக்கு நாம் அடங்கி நடக்கவேண்டும்? நம்மை அடக்கித் தன் இஷ்டப்படி ஆளும் அதிகாரம் இவனுக்கு எங்ஙனம் ஏற்பட்டது? அறிவு, ஆற்றல், திறமை முதலிய எதனால் இவன் சிறந்தவன்! என்று மக்கள் எண்ணிடத் துணிவு கொடுக்கும்வரை ஏற்படவே இல்லை! சிந்தனை அவ்வழி செல்லவில்லை. ஏன்! அந்த ஆழ்ந்த நம்பிக்கை—அவன் தேவகுமாரன்—ஆண்டவனின் மறுபதிப்பு—பிரதிநிதி—புண்ய புருஷன் — என்ற நம்பிக்கை.

இந்த நம்பிக்கையை அரணாகக் கொண்டுதான் கொடியோனெல்லாம்கூடக் கோல்கொள்ள முடிந்தது; அறிவற்றவன்கூட அரசனாகவாழ முடிந்தது, இஷ்டப்படி போக போகாதிகளில் புரள முடிந்தது.

நாட்டின் வளம், நாட்டுமக்களின் நல்வாழ்வு, அந்த வாழ்வுக்கு ஓர் பாதுகாப்பு, நாட்டுக்கு வேற்றவரால் கேடு நேராவண்ணம் அரணமைப்பு, நாட்டுமக்களின் கல்வி செல்வம், ஆகிய மகத்தான பலபொறுப்புகளுக்கு யாரை அரசர் என்று கொள்கிறார்களோ அவரைத்தான் நம்புகிறார்கள். அரசனே இவ்வளவுக்கும் பாதுகாவலன். வயலை அழிக்கவரும் வனமிருகங்களை வேட்டையாடி ஒழிப்பதிலிருந்து, எதிர்ப்படைகளை விரட்டுகிறவரையில், அரசனைக்கொண்டுதான் காரியமாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. உள்நாட்டுத்தகராறுகளைத்தீர்ப்பவனும் அரசனே. இவ்வளவு சிக்கலும் சிரமமும் நிரம்பிய மகத்தான பொறுப்புகளைத்தாங்கவேண்டியவன் மன்னன்! நமது மக்களின் முன்னோர் மனதிலே இருந்தவிதம் எப்படி என்று எண்ணினாலே இன்று நகைப்புப் பிறக்கும். இப்படிப்பட்ட பொறுப்பான, ஆற்றலுள்ளவன் அறிவு நிரம்பியவன் மட்டுமேசாதிக்கக்கூடியசெயலை மேற்கொள்ள வேண்டிய மன்னனை, யானைகரத்தில் பூமாலை கொடுத்தனுப்ப, அதுயார் கழுத்திலே மாலை இடுகிறதோ அவனையே மன்னனாகக் கொள்வது என்ற முறையிலேகூடக் கொண்டு திருப்தி அடைந்திருக்கிறார்கள். ஒருசிறு அலுவலகத்துக்குப் பணியாளைப் பொறுக்கி எடுப்பதற்காகக்காட்டும்திறமை பொறுமை அறிவுடைமையைக் கூட, பரந்த ராஜ்யங்களுக்குமன்னனைக்கொள்வதற்குக்கையாண்டதில்லை. இப்படிப்பட்ட கண்மூடித்தனமான முறையிலேமன்னர்களைத் தேடிப்பிடித்துப்பீடத்திலேற்றி அவனுக்கு 'பாதபூஜை' செய்து, அவன் அரசபோகத்திலே புரண்டுகொண்டு, பொறுப்பை மறந்து மதோன்மத்தனாகி, மக்களின் மதி, நிதி, மானம் ஆகியவற்றையும் சூறையாடினும் ஊமைகளாகி ஆமைகளாகி, பொறுக்கமுடியாத சங்கடம் நேரிட்டால் கொடுங்கோல் மன்னன் வாழுநாட்டில் கடும்புலிவாழும் காடு நன்றே என்று புலம்பிக்கிடந்தனரேயொழியக், கெட்டகோல்தனை முறித்திடுவோம் என்று கிளம்பினதில்லை! அந்த அளவுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது ஆண்டவனின் பிரதிநிதி அரசன் என்ற கோட்பாட்டில். ஏன் அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை அந்த அர்த்தமற்ற கோட்பாட்டிலே ஏற்பட்டது என்றால், அந்தக் கோட்பாடு, கோயிலிலிருந்து கிளம்பிற்று. பூஜாரி சொன்ன மொழி! ஆலயம், அரண்மனைக்கு அரணாயிற்று! அர்ச்சகன் அரசனுக்கு ஆதாரவாளனானான். அன்றுமட்டுமா! இன்றும் இதோ சர் சி. பி. இராமசாமி ஐயர் அரசரின் தேவ உரிமைபற்றிப்பேசக் கேட்கிறோமல்லவா! பூஜாரிப் பாரம்பரைதானே அவர்! ஜெபமாலையும் கோலும் இரட்டைப்பிறவிகள்.

சர். சி. பி. இராமசாமிஐயரின்

கருத்துரையைக் காடிக்கு ஒப்பிட்டதற்கான காரணம் இதுவே. கடவுளின் பிரதிநிதி மன்னன் என்ற கோட்பாடு, புளித்துப் போன விஷயம். இன்றும் அதிகார போதை தேடுவோரே இந்தக் காடியைப் பெறுவர்.

கடவுளின் பிரதிநிதி காவலன் என்ற கோட்பாடு, மன்னர்கள் செய்த மடைத்தனமான பல செயல்களால் மட்டுமல்ல, மக்கள் விழிப்புற்றதன் பலனாகவும் புதுக்கருத்துகள் ஏற்பட்டதனாலும், இதுபோது ஆதரிப்பாரற்றுப் போயிற்று.

மக்களே, ஆளும் உரிமை பெற்றோர், ஆனால் அவர்கட்கு அவகாசம் கிடையாது, எனவே அவர்கள் ஆளும் உரிமையைப் பிறனொருவனுக்குத் தருகின்றனர். அவனுக்கு அஃதோர் பொறுப்பு. பொறுப்புணர்ச்சி குன்றா வகையிலும், மக்களின் உரிமை நிலை கெடாத முறையிலும் ஆள்வதே அவன் கடமை. அக்கடமையினின்றும் அவன் வழுவினால், அவனுக்கு ஆள்வதற்கு உரிமை தந்த மக்களே, அதனை எடுத்துவிடவும் உரிமை பெறுகின்றனர், எனும் புதிய கொள்கை இக்காலை நிலைத்து விட்டது. மன்னர்கள் ஆங்காங்கு, விட்டகுறை தொட்டகுறை என இருக்கின்றனர் எனினும், அவர்களும் இப்போது உருட்டு விழியினராய் இருத்தல் இயலாததாகி விட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யாதிபதியுங்கூட, குடி அரசுக் கோட்பாட்டுக்கு ஊறு தேடும் உரிமை பெற்றவரல்ல. அந்தளவு முறை குடிக்கோனாட்சி. அரசர் ஆள்கிறார்— ஆளவைக்கிறார்கள் மக்கள்; மற்ற நாட்டு மன்னர்களாவது, அதிகாரம் தமக்குளது, நாமே சர்வமும் என்று இறுமாந்து போகலாம், பிரிட்டிஷ் மன்னர் அது போலிருக்க முடியாது. ஏனெனில், முடி தரித்த மன்னனையே பிடித்திழுத்துச் சிரச்சேதம் செய்தனர் அங்கு. முதலாம் சார்லஸ் மன்னன், புன்னகைப் புலியுமல்ல, நகை முகங் காட்டும் நரியுமல்ல, தன் நிலை பற்றி மிக உயர்ந்த எண்ணங் கொண்டவன். அந்தக் கருத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினவன்.

மன்னன் தவறு செய்யான்! செய்யினும் அவனைக் கேட்க மக்களல்ல, அருகர். ஆண்டவனே கேட்கவேண்டும். ஏனெனில், மன்னன் பெற்ற உரிமை ஆண்டவன் அருளியது—இது சார்லசின் சித்தாந்தம். இதனை நிலை நாட்ட முயன்றதாலேயே அந்த மன்னனை மக்கள் எதிர்த்தனர் — கொன்றுபோட்டனர். அவனுக்குப் பின்னர் ஆளவந்த இரண்டாம் ஜேம்ஸ் என்ற மன்னனை, மண்டலத்தை விட்டே விரட்டி அடித்தனர். எனவே பிரிட்டிஷ் மன்னர், கட்டுக்கடங்காதிருக்கும் காவலர்களல்ல! பல கட்சியினர் உள்ள நாட்டிலே! குடி அரசுக் கோட்பாட்டின்படி, ஒவ்வோர் சமயம் ஒவ்வோர் கட்சியே ஆட்சி உரிமை பெறும். அவ்வாட்சி, ஒரு சார்பாகி மக்களுக்குக் கேடு செய்யுமேல், குடி அரசு கொடிதாகுமே என்று அஞ்சி, கட்சிகளுக்குப்புறம்பாக, ஆனால் எல்லாக் கட்சியினரும் எமது மன்னன் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய சின்னமாக, ஒரு நாட்டுக்குரித்தான கொடி போல, கீதம்போல, மன்னனைக் கொண்டுள்ளனர். அவ்வளவேயொழிய, [illegible] காவலராமேனும் என்று கருதும் சிற்றரசர்களின் சீழ்பிடிக்கும் சிறுமதிப் போக்குடையவரல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்யாதிபதிக்கே

இந்நிலை என்றால், பெரிய ஜெமீ
அளவுள்ள சுதேச சமஸ்தா
பதிகள் எவ்வளவு பொறு
புணர்ச்சியுடனும் தன்னடக்
துடனும் நடந்துகொள்ளவேண்
டும்! ஆனால் அவர்களிலே மிக
பெரும்பாலோரின் வாழ்க்கை
முறை எவ்விதமிருக்கிறது? பிரி
டிஷ் படை இருக்கிறது, நாட்
டைப் பாதுகாக்க! சட்டம் இரு
கிறது சாமரம் வீச! மக்கள்
உள்ளனர் அடி பணிய! இந்நி
யில் அவர்கள் இன்பத்தை
தேடி இலண்டன் பாரிஸ்சென்
அலைவதும், இன்று ஓர் வாகனம்
நாளை வேறோர் வகை என்
கொள்வதும், கோலாகலமா
இருப்பதுமன்றிக், கோல்கொண்
டது குறிப்பிட்ட ஓர் இலட்சி
யத்துக்காக, பொறுப்பினை நிறை
வேற்ற என்று கொண்டதில்லை
நமது சுதேச மன்னர்கள், ஆண்
டில் ஓர் பகுதி வெளிநாடுசென்
'ரசம்' அனுபவிக்காவிட்டால்
திருப்தி பெறுவதில்லை. தம
ஆளுகையிலே உள்ள மக்க
குடிசையிலே குமுறினாலு
கவலையில்லை தமது லாயத்திலே
குதிரைகள் ஜெபமாகககனை
துக் கொண்டிருந்தால் போது
என்று இருப்பவர்கள். ஆ
லழகிகளையும் பாடலில் வல்லே
ரையும் தேடி அழைக்க அவர்
ளிடம் தூதுவர் இருப்ப
யொழிய, மக்களின் மனநி
யினை அறிந்துரைப்போரு, அ
நெறி கூறுவோரும் இரார்.

இவர் தம் வீரத்தைத் தான்
வெள்ளையன் இங்கு நுழைந்
போது கண்டோமே! இன்று
அந்த வ[illegible] தந்[illegible] லா
றினைப் படிக்கும்போது நமக்
வெட்கமும் துக்கமும் பிறப்
டெழுமே. துளியளவு ஒற்றுமை
இருந்ததா அந்நாளில். வெள்ளை

(3-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai M. A., at
Dravida Nadu' Press, 317—319 Hodgsonpet Conjeeveram.